**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன்– மதுரை எம்.எஸ். செல்லமுத்து அறக்கட்டளை மையம் " சக்தி அச்சகம்" மதுரை மற்றும் இராமநாதபுரத்திற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியுடன் கூடுதலாக திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் வரம்புக்குள் வராத அரசு சார்பு நிறுவனங்களின் (Quasi- Government) அச்சடிக்கும் பணியினை ஒப்படைத்தல் ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.24

நாள்: 23–05–2014
ஜய, வைகாசி 9,
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண்.206, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 03–11–2003.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடித எண்.6490/ மா.தி.ந.2.2/2011, நாள் 11.11.2011.
3. இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, நேர்முக கடித எண்.க்யூ1/ 39704/2012, நாள் 21.6.2012

------

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் மதுரையில் இயங்கிவரும் "எம்.எஸ். செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி மையத்தின்'' சார்பில் மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் மனநோயினால் பாதிக்கப்பட்டவர்களைக் கொண்டு இயங்கும் சக்தி அச்சகத்திற்கு மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் மனநோயினால் பாதிக்கப்பட்டோருக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்கும் வகையில் சிறப்பினமாக கருதி மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்கள் அச்சடிக்கும் பணியை ரூ.5.00 இலட்சம் வரையில் ஒப்பந்தப்புள்ளி கோராமல் வழங்கலாம் என ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர்/ மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதத்தில், தற்போது எம்.எஸ்.செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி மைய நிறுவனம் மதுரை மற்றும் இராமநாதபுரத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அனுமதியினை ஏனைய பிற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தி ஆணை வழங்கிட கேட்டுக் கொண்டுள்ளார்.

3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்து மதுரை எம்.எஸ்.செல்லமுத்து அறக்கட்டளை நடத்தும் "சக்தி அச்சகம்" மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் சிகிச்சை, பயிற்சி மற்றும் மறுவாழ்விற்காக மட்டுமே நடத்தப்பட்டு வருவதால், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் மனநோயினால் பாதிக்கப்பட்டோருக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் சிறப்பு இனமாக கருதி, இந்நிகழ்வினை பின்பற்றி பிற மாவட்டங்களுக்கான அச்சுப் பணிகளை கோரக் கூடாது எனும் நிபந்தனைக்குட்பட்டு, எழுது பொருள் மற்றும் அச்சுத் துறையின் வரம்புக்குள் வராத மதுரை மற்றும் இராமநாதபுரத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அனுமதியுடன் கூடுதலாக திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் வரம்பிற்குள் வராத அரசு சார்பு நிறுவனங்கள், தங்கள் நிறுவனங்களின் அச்சுப் பணிகளை, அந்நிறுவனங்கள் விரும்பும்பட்சத்தில், மதுரையில் இயங்கி வரும் எம்.எஸ்.செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி மையத்தின் சார்பில், மனவளர்ச்சி குன்றியவர்கள் மற்றும் மனநோயினால் பாதிக்கப்பட்டவர்களை கொண்டு இயங்கும் சக்தி அச்சகத்திற்கு வழங்கலாம் என அரசு ஆணையிடுகிறது.

4. மேலும் அவ்வாறு விருப்பப்படும் அரசு சார்பு நிறுவனங்கள் மேற்படி அச்சகத்திற்கு வழங்கும் அச்சடிக்கும் பணியின் மொத்த மதிப்பு ரூ10.00 இலட்சத்திற்கு மேல் மிகுதியாகும் பட்சத்தில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000த்தை பின்பற்ற வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அ.சா. எண்.7371/எ.அ.2.2/2014 நாள்9.5.2014 மற்றும் நிதித் துறை அ.சா.எண்.25695/நிதி(சந)/14 நாள்21.5.14 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, சென்னை–2.
நிருவாக இயக்குநர், திருவாளர் எம்.எஸ்.செல்லமுத்து அறக்கட்டளை, எண்.643, கே.கே.நகர், மதுரை–20.
மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் மற்றும் தேனி.

**நகல்:**
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(எ.அ.2.2)த் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதி(சந)த் துறை, சென்னை–9.
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.